விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 276 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 04 வியாழக்கிழமை (21.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# திலீபன் அஞ்சலிக்கு தடை விதிக்குக

## யாழ்.பொலிஸாரின் மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி

(யாழ்ப்பாணம்) தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் திலீபனின் 6ம் நாள் நினைவேந்தல்



15



## வவுனியாவில் திலீபனுக்கு அஞ்சலி

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனி வவுனியாவில் இடம் பெற்றநிலை 15

## சதொசவில் விலைகள் குறைப்பு

(கொழும்பு)
லங்கா சதொச நிறுவனம் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நேற்று முதல் குறைத் 15

## துன்னாலையில் வாள்வெட்டு

### இருவர் படுகாயம்

(கரணவாய்)
துன்னாலை வேம்படி பகுதியில் இரு பகுதியினருக்கு இடையில் இடம் பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய 15

# வடக்குக் காணிகள் டிசம்பருக்குள் விடுவிப்பு



## பாராளுமன்றில் அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)
வட மாகாணத்தில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்றில் வைத்துத் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### மாங்குளத்தில் சிறுமி மீது வன்புணர்வு

## குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனை

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த 2016ஆம் ஆண்டு பதினாறு வயது சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றவாளிக்கு பத்து வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 15

## அபிவிருத்தி இலக்கை அடைய முன்னேற்றத்தில் திருப்தி இல்லை

### நியூயோர்க்கில் ஜனாதிபதி ரணில்



(நியூயோர்க்)
நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான உலகலாவிய முன்னேற்றத்தின் தற்போதைய நிலை திருப்திகரமானதாக இல்லை என்றும், 12 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே தற்போது காண முடிவதாகவும் ஏனைய 04

## தமிழர்களின் காணிப் பிரச்சினையை ஆணைக்குழு மூலம் தீர்க்க வேண்டும்

### அத்துரலியே ரதன தேரர்



(கொழும்பு)
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்சினைக்கு காணி ஆணைக்குழு ஊடாக தீர்வு காண வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் பல முறை வலியுறுத்தி 04

## இலங்கையின் வளர்ச்சிக்கு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)
இலங்கையின் அபிவிருத்திக்காக 19 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்க தீர்மானித்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.
குறித்த நிதியானது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான அபிவிருத்திக்கான உடன்படிக்கையின் பிரகாரம் வழங் 02

நடுவு நிலை தவறாது நிற்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் மருத்துவர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசு உரிய தீர்வை காண வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று புதன்கிழமை நாண்பகல் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு வாசலில் சுமார் 20 வைத்தியர்கள் ஒன்று கூடி கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர் .

சுகாதாரத்துறை எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை உள்ளடக்கி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் எட்டு அம்ச கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பிய போதிலும் அதனை அரசு நிராகரித்துள்ளது. அதனை நிறைவேற்ற வலியுறுத்தியும், சுகாதாரத்துறையில் நிலவிவரும் நெருக்கடிகள், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசு உரிய தீர்வை காண வலியுறுத்தியும் இக்கவன ஈர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இலவச வைத்திய சேவையை முடக்காதே, முறையற்ற வரி சம்பள வெட்டுக்களால் வைத்தியர்களை துரத்தாதே, ஆகிய கோஷங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் தாங்கியிருந்தனர். (ம-7.60)


# கஜேந்திரகுமார், கஜேந்திரன் எதிர்வரும் 24 ஜெனிவா பயணம்

இலங்கை தொடர்பான இணை நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவும் எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஜெனிவா செல்லவுள்ளனர்.

அங்கு இடம்பெறவுள்ள சந்திப்புக்கள் குறித்து இன்னமும் உறுதியாகத் தீர்மானிக்கப்படாத போதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகள், இணை அனுசரணை நாடுகள் மற்றும் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்புக்களை நடாத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் முறையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.ந.விஜிதரன்** அவர்களின் அன்புச் சகோதரர்

அமரர் **நடராசா சதீஸ்வரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17161)

**யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**


## இலங்கை...

கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக அமையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# நடிகை ஆன்றியா நல்லூரில் வழிபாடு



இலங்கைக்கு படப்பிடிப்பு ஒன்றுக்காக வந்துள்ள தென்னிந்திய பிரபல பாடகியும் நடிகையுமான ஆன்றியா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள நிலையில் நேற்று புதன்கிழமை நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். நல்லூருக்கு சென்று தான் எடுத்த புகைப்படங்களை தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ள நிலையில் அவை, முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது. (ம-7.33.104)


## கண்ணீர் அஞ்சலி

சித்தன்கேணிப் பகுதியில் நீண்டகாலமாக எமது பத்திரிகை முகவராக செயற்பட்ட

அமரர் **சுப்பிரமணியம் தியாகராசா**

பிறப்பு : 20.11.1933 இறப்பு : 20.09.2023



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்*

**வலம்புரி பத்திரிகை நிர்வாகம்**



## 31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

எமது சனசமூக நிலையத்தின் உப தலைவரும், தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தாவும் தையிட்டி கிழக்கு கிராம முன்னேற்ற சங்க உறுப்பினரும் எமது கிராமத்தின் சமூக சேவையாளருமாகிய

அமரர் **சண்முகநாதன் சயந்தன்**



அவர்கள் கடந்த 22.08.2023 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கலாவல்லி சனசமூக நிலையத்தினதும், முன்பள்ளியினதும் நிர்வாகத்தினர் மற்றும் உறுப்பினர்கள், விக்கினேஸ்வரா வீதி, தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை.**

(17167)



## மரண அறிவித்தல்

பிறப்பு 31 – 03 – 1952



இறப்பு 20 – 09 – 2023

### கிருஷ்ணர் இராசலட்சுமி

கிருஷ்ணர் இராசலட்சுமி அவர்கள் கடந்த 20.09.2023 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வானை - கிருஷ்ணர் தம்பதியரின் மகளும் ஸ்ரீமணி, காலஞ்சென்ற இராசாத்தி ஆகியோரின் அன்பு தங்கையும் காலஞ்சென்ற தேன்மொழி, வளர்மதி, பிரபுராம், கமலக்கண்ணன், சசிகுமார், ராஜ்குமார், கமலதாசன், ரஞ்சித்காந்த், ரஞ்சித் சோபனா, சதீஸ்காந்த், ஸ்ரீகாந், நாகநந்தினி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21.09.2023 மாலை இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C-7296)

தகவல்: [illegible] சோபனா
077 229 9896



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 90 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17168)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களை சீண்டினால் அவர்கள் வேடிக்கை பார்க்க மாட்டார்கள்

## தியாகி திலீபன் நினைவேந்தல் தொடர்பில் சாகர

**(கொழும்பு)**

**திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எதிராகக் கொழும்பில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கிலும் நீதிமன் றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இல்லையேல் தமிழ் -சிங்கள இனங்களுக்கிடையில் வன்முறை கள் வெடித்து இன நல்லிணக்கமும் மத நல்லிணக்கமும் சீர்குலையும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னதான் தியாகத்தைத் திலீபன் செய்தாலும் அவர் ஓர் பயங்கரவாதி. அவரைக் கொழு ம்பில் நினைவேந்த நீதிமன்ற ங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.

அதேபோல் மூவின மக்க ளின் ஒற்றுமையைக் கருதி வடக்கு, கிழக்கில் உள்ள நீதி மன்றங்களும் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகளு க்குத் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் தமிழ் விடுதலை அமைப்பினர் சம்பந்தப்பட்ட அனைத்து நினைவேந்தல் நிகழ்வுகளு க்கும் நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

சிங்கள மக்கள் மீண்டுமொரு வன்முறையை, போரை விரு ம்பவில்லை.

தமிழ் அரசியல்வாதி கள்தான் சிங்கள மக்களைச் சீண்டும் வகையில் செயற்படு கின்றார்கள். அப்படி அவர்கள் செயற்படும்போது சிங்கள மக் கள் கைகட்டி வேடிக்கை பார்க்க மாட்டார்கள் எனவும் தெரிவித் தார். (நி-5)

## வலுவிழந்தோர் வாக்களிக்க புதிய அடையாளஅட்டை

(கொழும்பு)

வலுவிழந்தோர் வசதியாக வாக்களிக்கும் வகையில் புதிய அடையாளஅட்டை வழங்கும் முன்னோடி வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பப்ரல் அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்போது 10 மாவட்டங் களில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்துள்ளது.

முழு இலங்கையிலும் வழ ங்குவதன் இயலுமை தொடர்பில் கண்டறியுமாறு குழு வின் தலைவர் தெரிவித் தார். (நி-6)

## விசேட வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை - சுகாதார அமைச்சு

(கொழும்பு)

பயிற்சிக்காக நியமிக்கப்படும் விசேட வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பணிப் புரை வழங்கியுள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பிரதி பணி ப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

பயிற்சி பெற்ற விசேட வைத் தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டது. ஒரு விசேட வைத்தியருக்கு பயிற்சி அளிக்க பொதுவாக 5 ஆண்டுகள் ஆகும்.


இன்னும் 5 ஆண்டுகளில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். ஏனெனில் தற் போது ஆட்சேர்ப்பு எண்ணி க்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் விசேட வைத்தியர் களை நியமிக்கும் திறன் எங்க ளிடம் உள்ளது. எதிர்காலத் தில் பெருமளவிலான விசேட வைத்தியர்கள் இலங்கைக்கு வர உள்ளனர்.

அந்த குழுவின் வருகை யால் இந்த மோதல் சூழ்நிலை க்கு தீர்வு கிடைக்கும் என நினைக்கிறேன்.

சுமார் 600 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி-6)

## இலங்கையின் செயற்றிட்டங்களுக்கு முழு ஆதரவு - சமந்தா பவர் உறுதி



(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக யுஎஸ் எய்ட் (USAID) நிறுவன த்தின் நிர்வாகி சமந்தா பவர் உறுதியளித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க வுடனான சந்திப்பின் போது, சமந்தா பவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள் ளார்.

சர்வதேச நாணய நிதிய த்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய சுரு க்கமான விளக்கமொன்றை ஜனாதிபதி அளித்துள்ளார்.

அதேவேளை, அதன் வெற்றிகரமான முடிவிற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப் பையும் அவர் எடுத்துரை த்தார்.

ஊழல் ஒழிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டதை தொடர்ந்து இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு தற்போது முறையான பயி ற்சியுடன் ஊழியர்களை இணைக்கும் பணி மேற் கொள்ளப்படுவதாக ஜனா திபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், ஊழல் தடுப்புச் சட்டத்தின் எதிர்பார்க்கப்படும் விளைவு களை அடைய கூடுதலாக ஒரு வருடம் தேவைப்படும் என்று அவர் சுட்டிக்காட்டி னார். எனவே இந்த செயற் றிட்டங்களுக்கு ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி, சமந்தா பவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

## 'ஹஷிஸ்' போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

பெல்ஜியத்தில் இருந்து இல ங்கைக்கு இறக்குமதி செய்யப்ப ட்ட கொள்கலனில் ஒருதொகை ஹஷிஸ் போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியு ள்ளனர்.

16.4 மில்லியன் ரூபா பெறு மதியான ஹஷிஸ் போதைப் பொருளையே ஒரு கொடவத்தை கொள்கலன் முனையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வென்னப்புவ, ஹலவத்த பகுதியில் உள்ள முகவரிக்கு குறித்த பொதி அனுப்பப்பட்டு ள்ளதுடன் அதில் ஒரு கிலோ 98 கிராம் எடையுடைய ஹஷிஸ் இருந்ததாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த முகவரி தொடர்பில் மேற்கொண்ட விசாரணைக ளின் போது முகவரி போலியா னது என உறுதி செய்யப்பட் டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்த னர். (நி)

## கோழி இறைச்சி, முட்டை விலை அதிகரிக்கப்பட மாட்டாது

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் முட்டை மற்றும் கோழி இறைச்சி விலைகளை அதிகரிப்பதற் கான எந்தத் திட்டமும் அரசா ங்கத்திடம் இல்லை என விவசாய அமைச்சர் மஹி ந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

கொவிட் -19 தொற்று நோயால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான தற்காலிக நடவடிக்கையே முட்டை இறக்குமதி எனவும் அமை ச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இறக்கும தியை தொடரும் திட்டம் எது வும் இல்லை என்றும் அத ற்குப் பதிலாக உள்ளூர் முட்டை, மற்றும் கோழி உற்பத்தியை அதிகரிப்பதே அரசின் கவனம்.

உள்ளூர் உற்பத்தியை ஆதரித்து அதிகரிப்பதன் மூலம் நாட்டிற்குள் முட்டை மற்றும் கோழியின் நிலை யான விநியோகத்தை உறுதி செய்வதை அரசாங் கம் நோக்கமாகக் கொண்டு ள்ளது.

முட்டை விலையை உய ர்த்த முயற்சி நடப்பதை நாங்கள் கண்டறிந்துள் ளோம்.

ஆனால் அவற்றை அதி கரிக்க அனுமதிக்க மாட் டோம். கோழி விலையிலும் இதையே கடைப்பிடிக்கி றோம். கோழி விலை அதிகரிக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித் தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**1. பொதுமுகாமையாளர் 109/09**

1. சம்பள குறியீட்டு இல. 101/09
2. சம்பள அளவுத்திட்டம் 20200-250x10-260x10-25300 (02/2022 இன் படி)
3. வெற்றிட எண்ணிக்கை 01
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்ட பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 2 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்ட பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவு உயர்தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 04 வருட அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**2. உற்பத்தி முகாமையாளர் (107/12)**

1. சம்பள குறியீட்டு இல. 107/12
2. சம்பள அளவுத்திட்டம் - 18820-170X10-185X10-22370 (02/2022 இன் படி)
3. வெற்றிட எண்ணிக்கை - 01
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் -

(அ) கூட்டுறவு ஊழியர் 13வது சம்பள திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத் திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் 04 ஆண்டுகால அனுபவம்.

(ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் உற்பத்தி / சந்தைப்படுத்தல் / பொருள் விநியோகமும் பங்கீடும் / பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் / அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை / மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

**3. காரியாலய உதவியாளர் 317/17**

1. சம்பள குறியீட்டு இல - 317/17
2. சம்பள அளவுத்திட்டம் - 16515-130* 10-145*10-19265 (02/2022 இன்படி)
3. வெற்றிட எண்ணிக்கை - 01
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் -

(அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08ம் தர கல்விச் சான்றிதழ்
வயதெல்லை - 18-45
விண்ணப்ப முடிவுத்திகதி - 06.10.2023

குறிப்பு - மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் 02/2022 சுற்றுநிருபத்திற்கு அமைவான படிகள் வழங்கப்படும்.

வயதெல்லை கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கப்பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி தலைவர் / பொதுமுகாமையாளர் வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் 01ம் வட்டாரம் வேலணை கிழக்கு வேலணை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தபால் உறையின் மேல்புறத்தில் உரிய பதவி குறிப்பிடப்பட வேண்டும்

**இங்ஙனம்**
**கூட்டுறவுச்சேவையிலுள்ள**
**தலைவர்**
**வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

(C-7292)


## அபிவிருத்தி...

முக்கியமான இலக்குகளில் 30 சதவீதத்தை இன்னும் அடைந்து கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தொடருக்கு இணையாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2023 கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளால் 2015இல் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலின் பின்புலம் தொடர்பில் இதன்போது தனது கவனத்தை செலுத்திய ஜனாதிபதி, அதே ஆண்டில், COP 21 அமைப்பின் 196 நாடுகளால் நிறைவேற்றப்பட்ட பரிஸ் ஒப்பந்தம், முற்போக்கான உலகளாவிய முயற்சியாகும் எனவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் பாரிய அளவிலான வளப்பற்றாக்குறை அதற்குத் தடையாக அமைந்துள்ளது.

மேலும், 2020 இல் ஏற்பட்ட கோவிட் நோய்த்தொற்று எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதை தாமதப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்ததுடன், பல்வேறு துறைகளின் பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக முடங்கிப் போயின. இது ஏற்கெனவே நிலவும் உலகளாவிய கடன் நெருக்கடியை அதிகப்படுத்தியது. இந்த சவாலான நிலை, இலங்கை உட்பட மேலும் பல்வேறு நாடுகளை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது. இந்த சூழ்நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் அபிவிருத்தி இலக்குகளை அடையக் கூடியதாக இருக்கிறதா என்பது இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கை தொடர்பில் கூறுவதாயின், 2019ஆம் ஆண்டின் முழுமையான மதிப்பீட்டுக்கமைய, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 9% முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கோவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியும் இந்த இலக்கை அடைவதற்கு பெரும்தடையாக காணப்பட்டது.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்திற்கு மாத்திரம் 2030 ஆம் ஆண்டாகும்போது 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான முதலீடுகள் தேவைப்படும். அத்தனை நிதியைச் செய்து கொள்வது [illegible] பாரிய சவாலாகும்.

இக்கட்டான பொருளாதார நெருக்கடி நிலைமை இலங்கைக்கு மாத்திரமின்றி ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல நாடுகளை பாதித்துள்ளதுடன், வங்குரோத்து நிலையிலிருந்து மீளக் கூடிய நிலையிலிருந்த நாடுகள் கூட தற்போதைய நெருக்கடியின் விளைவுகளுடன் போராடுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை நிறைவேற்ற 2030ஆம் ஆண்டுக்குள் 5.9 டிரில்லியன் நிதியுதவி தேவை என்பதை G20 உச்சி மாநாடு மீண்டும் உறுதிப்படுத்தியது.

மேலும், 2050 ஆண்டுக்குள் நிகர-பூஜ்ஜிய உமிழ்வை அடைய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 04 டிரில்லியன் வருடாந்த முதலீடு அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(ம-7)

## தமிழர்களின்...

யுள்ளோம்.

தமிழர் பிரதேசங்களில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என அத்துரலியே ரத்தன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மேய்ச்சல் தரை பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் அப்பிரதேசங்களில் மந்தை மேய்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

காணி விடுவிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினர் இந்த அடிப்படை பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்துவதில்லை.

முறையான மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள், பசுக்கள் வனவள பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது அத்தியாவசியமானது என்றார். (ம-7)



4வது பிறந்தநாள் வாழ்த்து

சிறீசங்கர் - சரணிகா தம்பதியரின் செல்வப் புதல்வி

**காயுத்திரி**

அவர்கள் தனது நான்காவது பிறந்தநாளை தனது சகோதரி காருண்ணியா 21.09.2023 வியாழக்கிழமை இன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.


வாழ்த்துவோர்:
**சஜீவன் (மாமா),**
**சஞ்ஜேவன் (மாமா)**
இல.103/1, கோயில் வீதி, நல்லூர்.

(C-7295)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரகுமாரவுக்கு பெருகும் மக்கள் ஆதரவு

### சஜித் பின்னடைவு- வெளியான கருத்துக் கணிப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிற்கான மக்கள் ஆதரவு கணிசமாக அதிகரித்துள்ளதாக சுகாதார கொள்கைகள் மையம் வெளியிட்டுள்ள கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

இதன்படி, அநுரகுமார திஸாநாயக்கவிற்கான மக்கள் ஆதரவு 16 புள்ளிகள் அதிகரித்து 28 ஆக உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கான ஆதரவு 14 புள்ளிகள் வீழ்ச்சியடைந்து, -58 புள்ளிகளாக இருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவு -46என்ற மாறா புள்ளியாகவும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கான ஆதரவு -78 என்ற மாறா நிலை புள்ளியாகவும் இருக்கின்றன.

எவ்வாறாயினும், இந்த கருத்துக் கணிப்பின் படி, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்குமான ஆதரவு மறை (-) பெறுமதியிலேயே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-6)

# சீன உளவுக் கப்பல் வருகையால்

# தமிழ்நாட்டிற்கு பேராபத்து

### தடுக்க வேண்டும் என்கிறார் ராமதாஸ்

(டில்லி)

**இலங்கைக்கு வரவுள்ள சீன உளவுக் கப்பலுக்கு அனுமதியளிக்கக்கூடாது என இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா எச்சரிக்கை விடுக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

சீனாவிலிருந்து புறப்பட்டுள்ள சியான்6 உளவுக் கப்பல் அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், 17 நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபடவுள்ளமை அதிர்ச்சியளிப்பதாக ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சீன உளவுக் கப்பலின் ஆராய்ச்சியானது, தென் மாநிலங்களை உளவு பார்க்கும் செயற்பாடு என்பதால், இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு இது மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அரசின் அச்சுறுத்தலுக்கு அஞ்சிசீன கப்பலுக்கு தாம் அனுமதி அளிக்காதது போல இலங்கை அரசு காட்டிக்கொள்வதாக பாட்டாளிமக்கள் கட்சியின் நிறுவுநர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-6)





புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உயிரிழந்த வர்த்தக உரிமையாளர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தில் வர்த்தக சங்க உரிமையாளர்களாக இருந்து இயற்கை எய்திய வர்த்தகர்களுக்கான குறித்த நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (படம்- சதீஸ்)

## வேகமாக உயரும் டொலரின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 329.93 ரூபாவாகவும், கொள்வனவு விலை 318.69 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 246.87 ரூபாவாகவும், கொள்வனவு விலை 235.20 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)


## நாகையில் இருந்து இலங்கைக்கு விரைவில் பயணிகள் கப்பல் சேவை- இந்திய அரசு திட்டம்

(சென்னை)

இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசுடன் இணைந்து பயணிகள் கப்பல் போக்குவரத்தினைத் தொடக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

நாகையில் இருந்து இலங்கைக்கு ஒக்டோபரில் பயணிகள் கப்பல் தொடங்கப்படும் என்று தமிழக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.



நாகப்பட்டினம் சிறு துறைமுகத்திலிருந்து, 60 கடல் மைல்கள் தொலைவில், இலங்கையிலுள்ள காங்கேசன் துறைமுகத்திற்கு 150 பயணிகள் பயணிக்கும் விரைவு பயணியர் கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல்சார் வாரியம், ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை மற்றும் வெளியுறவுத் துறை மூலம் நாகப்பட்டினம் துறைமுக கால்வாய், தூர்வாருதல், பயணியர் முனையம் அமைப்பது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. (நி-6)

# இராசிபலன்

21.09.2023
புரட்டாதி 04, வியாழக்கிழமை
சஷ்டி முற்பகல் 10.47 மணிவரை

அனுசம் பிற்பகல் 1.09 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்- பரணி,கார்த்திகை.

வளவன்

**மேஷம்:** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கடகம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த் முயற்சிகள் கைகூடும்.

**துலாம்:** பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலமுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வரலாம், திட்ட மிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கன்னி:** தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், பொருளாதார நிலை உயரும் வாய்ப்புண்டு, மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**தனுசு:** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், தேக நலனில் சிறு சிறு இடையூறுகள் ஏற்பட்டு அகலும்.

**மீனம்:** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், தடைகள் விலகி தன வரவுகள் இடம் பெறலாம்.

அன்பு குறைந்துவிட்டால் குறைகள் பெரிதாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் மீனவர்கள்

## மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகள்

**(மன்னார்)**

**இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு தமது மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் சேதமாக்கப்படுவதால் தாங்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.**

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் குறித்த நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நேற்று புதன்கிழமை மதியம் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தற்போது கடலில் விடும் வலைகள் இந்திய மீனவர்களின் டோலர் படகுகளால் சேதமாக்கப்படுகின்றமை மற்றும் மீன் பாடு இல்லாத காரணங்களால் அவர்கள் தமது வேலை வாய்ப்பை இழக்கின்றனர். இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைந்து மீன் பிடித்துச் செல்லும் வரை கடற்படை என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

எனவே இவ்விடத்தில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-285)

## வவுனியா பல்கலைக்கழகத்தில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி



(குருமன்காடு)

வவுனியா பல்கலைக்கழகத்தில் தியாக தீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்தவகையில் தியாக தீபன் திலீபன் உண்ணாவிரதம் இருந்த 6 ஆம் நாளான நேற்று வவுனியா பல்கலைக்கழகத்தில் திலீபனின் திருவுருவப் படம் பொறித்த பதாகை காட்சிப்படுத்தப்பட்டு மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது. (நி-6-250)

## விளாத்திக்குள கல் அகழ்விற்கு எதிராக வவுனியாவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா. சின்ன விளாத்திக்குளம் குளத்தின் இயற்கையான அணைக்கட்டினை உடைத்து கல் அகழ்வுப்பணி இடம்பெறுவதற்கு எதிராக கதிரவேலர் பூவரசன்குளம் கமக்காரர் அமைப்பின் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு முன்பாக அலுவலகத்தின் வாயிலை பூட்டி அதன் முன்பாக இவ்ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்றது.

கல்குவாரி அமைத்துள்ளவர்கள் மேலிடத்தில் இருந்து அனுமதியை பெற்று வருவதால் தாம் எதுவும் செய்ய முடியாதுள்ளதாக வவுனியா அரச அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் இதனால் தமது விவசாயம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து குறித்த கமக்காரர் அமைப்பிற்கு கீழ்ப்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது குறித்த பகுதிக்கு வருகை தந்த ஓமந்தை பொலிஸார் ஆர்ப்பாட்டத்தினை கைவிடுமாறு தெரிவித்த நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் பொலிஸார் குறித்த கல் அகழ்வு பணியை இடைநிறுத்துவதாக தெரிவித்ததுடன் குறித்த பகுதியையும் சென்று பார்வையிட்டனர். இதன் பின்னர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடி குளத்தின் அணைப் பகுதியை செப்பனிட்டு தருவதாக உறுதிமொழி அளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டிருந்தது. (நி-6-250)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர் சோமசுந்தரம் கந்தையா நினைவுப்பேருரை -2023

(விவசாய பீடத்தின் முதலாவது பீடாதிபதியும், பயிரியற் துறையில் பேராசிரியரும்)

பேருரைத் தலைப்பு :

"Approach to sustainable soil use to feed a growing world population"

பேருரை வழங்குனர் :

Dr. Koki TOYODA,
Professor,
Institute of Agriculture,
Tokyo University of Agriculture and Technology.

திகதி : 22.09.2023 (வெள்ளிக்கிழமை)
மு.ப 10.30மணி

நிகழ்விடம் : பிரதான கலையரங்கம்,
விவசாயபீடம், யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம், அறிவியல் நகர்,
கிளிநொச்சி.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-7291)


## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிச ளிப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் என்.தயாளன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் றி.ஜோன் குயின்டஸ் பிரதம விருந்தி னராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

## தனங்கிளப்பில் உரமானிய பதிவுகள்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு நெற்செய்கை விவசாயிகளுக்கான பெரும போக உரமானிய பதிவுகள் இன்று வியா ழன் மற்றும் நாளை வெள்ளி ஆகிய இரு தினங்கள் தனங் கிளப்பு பொதுநோக்கு மண்ட பத்தில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

கமக்கார அமைப்பிற்குட்பட்ட அனைத்து நெற்செய்கை விவசாயிகளும் பதிவுகளை மேற் கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை, பாவனையில் உள்ள தொலை பேசி இலக்கம், 2023 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரிச் சிட்டை, வங்கிப் புத்தகம், விவ சாய சம்மேளன 2023 ஆம் ஆண்டிற் கான சந்தா ஆகிய வற்றுடன் வருகை தர வேண்டும். அத்துடன் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் காலபோக கூட்டத்திலும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (நி-6-30)

## நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்களால் சிரமம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபைக் குட்பட்ட இடங்களில் உள்ள நடைபாதைகளை சிறு வியாபார நிலையங்கள் ஆக்கிரமித்துள்ளமையினால் பாதசாரிகள் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பொது வைத்திய சாலை சந்தியில் இருந்து கொரவப்பத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி என்பன இவ்வாறு நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் விபத்துக்களை சந்திக்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

சன நெருக்கடி நிறைந்த குறித்த பகுதியில் இவ்வாறான நிலைமை காணப்படுவதனால் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

எனவே தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் சிறிய வியாபாரிகளும் பாதிக்கப்படாத வகையில் நகர சபை சிறந்த தீர்வை ஏற்படுத்த வேண்டும் என வரியிறுப்பாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6-250)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்திய குருதிக் கொடை நிகழ்வு நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இதன்போது பல பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர். (படம்: சிவசாந்தன், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் நினைவு ஊர்தி இனங்களிடையே மோதலை ஏற்படுத்தும்

## இது ஒரு சதித்திட்டம் என்கிறார் தயாசிறி



(யாழ்ப்பாணம்)

திலீபனின் நினைவு ஊர்தியானது சிங்கள -தமிழ் மக்களிடையே மோதலை ஏற்படுத்தும் சதித்திட்டம் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தாலுமே அகிம்சையான ஒரு நடவடிக்கைக்காக தன்னுடைய உயிரை தியாகம் செய்த திலீபனின் நினைவு உறுதியானது.

மட்டக்களப்பில் ஆரம்பித்து திருகோணமலையில் சிங்கள கிராமத்தின் ஊடாக சென்ற போது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த கிராமத்தில் விடுதலை புலிகள் அமைப்பில் இருந்த பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட பல சிங்கள மக்களின் குடும்பங்கள் வாழ்வதாலேயே குறித்த பேரணி மீது அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்த பேரணிக்கு நீதிமன்றத்தில் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட ஒரு பேரணியில் கலந்து கொண்டவர்கள் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது.

இவ்வாறான ஒரு பேரணிக்கு அனுமதியளித்தமை தொடர்பாக பொலி ஸாரும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தான் தமிழ் மக்களை எதிர்க்கவோ சிங்கள மக்களை ஆதரிக்கவோ இல்லை என்றும் சிங்கள மக்களை ஆத்திரமூட்டும் வகையில் தான் குறித்த பேரணி சிங்கள கிராமத்தினூடாக சென்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது. மீண்டும் தமிழ் -சிங்கள மக் களுக்கு இடையில் மோதலை ஏற்படுத் தும் சதித்திட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாகவும் இது தொடர் பாக அரசாங்கம் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (நி-5)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:பரணி கி.பா: 98 1/2
உயரம்: 5' 4
தகைமை/தொழில்: Diploma in Computer Technology.Electronic shop
எதிர்பார்ப்பு: நல்ல குணமான பெண்
தொ.இ: B/13946

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம் உயரம்: 5' 6
தகைமை/தொழில்:B.Eng(Hons) IT Excutive.
எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்
தொ.இ: B/13947

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : திருவாதிரை
கி.பா: 17 1/2 உயரம்: 5' 6
தகைமை/தொழில்: Machanical Engineer pvt Company (London)
எதிர்பார்ப்பு : பட்டதாரி. உத்தியோகம்.
தொ.இ: B/13952

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 14 3/4
உயரம் : 5' 5
தகைமை/ தொழில்: BBM, pvt company
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13953

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 10 ல் சூரி. செவ்
உயரம்: 5' 5
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ:G/13930

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 164 cm
தகைமை/தொழில்:NDT, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்
தொ.இ: G/13933

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 152 cm
தகைமை/தொழில்: A/L (முன்பள்ளி ஆசிரியை)
எதிர்பார்ப்பு உத்தியோகம்
தொ.இ:G/13936

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 49 1/2
உயரம் :156 cm
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: பட்டதாரி/ வெளிநாடு
தொ.இ:G/13937

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2918

**தினேஷ்**


கணவன்: பையன் வேலைக்கு வெளியூர் போறான் நல்லதா நாலு வார்த்தை சொல்லி அனுப்பு.



மனைவி: தம்பி உங்கப்பன மாதிரி இளிச்சவாய்தனமா இருந்திராத. கேனத்தனமா யாரு காசு கேட்டாலும் கொடுத்திராத. அந்தாளு மாதிரி சோறு சோறுன்னு அலையாத.

**பிரவின்**

பகலில் தூங்குபவரா நீங்கள்? கண்டிப்பாக இதைப் படித்துப் பாருங்கள்.



நான் படிக்க மாட்டேன். நான் வருத்தப்படுற மாதிரித் தான் நீ ஏதாவது எழுதி வைச்சிருப்ப.

**தனுசா**

இப்ப இருக்கிற குழந்தைகளுக்கு ஞாபசக்திக்காக பாதாம், டிரை ஃப்ரூட்ஸ் எல்லா தேவைப்படுது.




ஆனா நம்ம காலத்துல கன்னத்தில இரண்டெ ரெண்டு நல்ல அறை.அவ்வளவுதான் அம்புட்டும் ஞாபகம் வந்திடும்.

**தக்ஷி**

கணவன்: சாமிக்கிட்ட என்னம்மா வேண்டிக்கிட்ட

மனைவி: அடுத்த பிறவியே வேண்டாம்னு தான்.

கணவன்: இதை போன பிறவியிலேயே வேண்டியிருக்கக் கூடாதா.

**ராணா**

சம்பள உயர்வு உண்டா சாமி.



அதுவா ஜால்ரா அடிக்கிறவனுக்கும் காக்கா பிடிக்கிறவனுக்கும் போட்டு குடுக்கிறவனுக்கும் தாம்மா தாராங்க.

**கம்சன்**

கடவுளே நீ என்னைய நிம்மதியா வாழ விடலனாலும் பரவாயில்லை....




ஆனா என்னைய வச்சி பெருசா எதையும் செய்யாமல் இருந்தாலே போதும்பா....


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 203

# நற்பெயர் பெறுவது சாதாரண விடயமல்ல



ஒரு ஜப்பானிய மீன்வியாபாரிக்கு ஓர் ஏரியில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்ட நேரம் இரவு 12 மணியிலிருந்து அதிகாலை 3 மணி வரை. அந்த வியாபாரியும் அவருடைய மகனும் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். வெகுநேரம் தூண்டிலில் எந்த மீனும் அகப்படவில்லை.

அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் முடிகிறது. அதேநேரம் அவரது மகன் போட்டிருந்த தூண்டிலில் ஏதோ அகப்படுகிறது. இழுத்துப் பார்க்கும் போது ஒரு மிகப்பெரிய மீன், அவர்கள் இதுவரை பார்த்திராத அளவு பெரியதாக இருந்தது.

"வாவ்" என்று மகன் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தான். ஆனால் அவனது தந்தை சொல்கிறார்... "மகனே அந்த மீன் நமக்கு வேண்டாம். அதை மீண்டும் ஏரியிலே விட்டு விடு" "ஏனென்றால்..

"நமக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. அதனால் அது நமக்குச்சொந்தமில்லை." நேரம் இப்போது தானே முடிந்தது. அதுவும் இதை யாரும் பார்க்கவே இல்லையே அப்பா !"

"யாரும் பார்க்காவிட்டால் என்ன.. அப்படி ஒரு குற்ற உணர்வுடன் அதைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமா.. யோசித்துப் பார் மகனே" கலங்கிய கண்களுடன் அந்த மகனும் அந்த மீனை ஏரியிலே விட்டு விடுகிறான்.

ஆண்டுகள் பல ஓடுகின்றன. அதே ஏரிக்கரை. அந்தப் பெரியவர் இல்லை. அந்த மகனும் அவனுடைய மகனும் வந்திருக்கிறார்கள். அன்று நடந்த சம்பவத்தை தன் மகனுக்கு விபரிக்கிறார். சொல்லிவிட்டு,

"அன்று என் தந்தை சொல்லியதைக் கேட்டதால் அந்த மீனை மட்டும் தான் இழந்தேன். ஆனால் அவர் என் மனதில் பதித்த அந்த நேர்மையால் வாழ்க்கையில், வியாபாரத்தில் எனக்குக் கிடைத்த நற்பெயர் சாதாரணமானதல்ல... அன்று நான் அந்த அரிய மீனை எடுத்துப் போயிருந்தால் என்ன நேரிட்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

அதில் ஒன்றும் தவறு இருப்பதாக எனக்கு அப்போது தோன்றவில்லை. என்ன கொஞ்சம் அதிகம் பணம் கிடைத்திருக்கும். ஆனால் அப்படிச் செய்திருந்தால், அதுவே ஒரு "ருசி காண வைத்த" செயலாக மாறியிருக்கும்.

ஒரு தவறு செய்வதும், அதை செய்யாமல் இருப்பதும் ஒருவித மனோபாவம் தான். ஆனால் அதை ஒருமுறை செய்யத் தொடங்கிவிட்டால், அதை விட முடியாது. பிறகு என்றாவது ஒருநாள் அசிங்கப்படுத்தான் போயிருப்பேன்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் இந்தியாவின் ஒய்சாலா கோவில்கள் சேர்ப்பு



(டில்லி)

கர்நாடகா வின் பேலூர், ஹாலேபிட் மற்றும் சோமநாத்புரம் ஆகியவற்றின் ஒய்சாலா கோவில்கள் உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் இதற்கு இந்தியாவின் 42 ஆவது யுனெஸ்கோ உலக பாரம் பரிய தலம் என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது.

இதற்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், இந்தியாவுக்கு அதிக பெருமை கிடைத்துள்ளது. யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் பிரமிக்க செய்யும் புனித தோற்றம் கொண்ட ஒய்சாலா கோவில்கள் சேர்க்கப்பட்டு உள்ளன. கால வரையற்ற அழகு மற்றும் சிக்கலான விபரங்களைக் கொண்ட ஒய்சாலா கோவில்கள் இந்தியாவின் கலாசார பாரம்பரிய செறிவுக்கான தக்க சான்றாக உள்ளன.

நம்முடைய முன்னோர்களின் தனிச் சிறப்புடனான கைவினை திறனை விளக்கும் வகையிலும் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே, யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் மேற்கு வங்காளத்தின் சாந்திநிகேதன் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தாய்வானைத் தொடர்ந்து அச்சுறுத்தும் சீனா வான் எல்லையை வட்டமிடும் போர் விமானங்கள்



(தாய்பெய்)

தாய்வானை தொடர்ந்து அச்சுறுத்தி வரும் சீனா தற்பொழுது தாய்வானை நோக்கி அனுப்பும் போர் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

தாய்வானின் அரசியல் நடவடிக்கைகளால் மிகவும் அதிருப்தி அடைந்த சீனா இதனால் சமீப காலமாக தாய்வான் எல்லையில் சீனா அடிக்கடி போர்ப்பயிற்சிகளை நடத்தி வருகிறது.


இதற்கிடையே சீனாவின் இந்த நடவடிக்கைகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என தாய்வான் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் சீனாவுக்கு சொந்தமான 103 போர் விமானங்கள் தாய்வான் எல்லையில் பறந்தன. அதில் 40 விமானங்கள் இரு நாடுகளுக்கு இடையேயான எல்லையை தாண்டியதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

அதேபோல் 9 போர் கப்பல்களும் தாய்வானின் கடற்பகுதிக்கு அருகே நிறுத்தப்பட்டு இருந்ததாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக அங்கு போர்ப்பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. எனவே, இதுபோன்ற ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை உடனடியாக கைவிடுமாறு தாய்வான் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

# பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் டிரோன் தாக்குதல் 3 பாலஸ்தீனர்கள் பலி, 30 பேர் காயம்



(ஜெருசலம்)

இராணுவம் மேற்கு கரையோர அகதிகள் முகாம் பகுதியில் டிரோன் மூலம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று பாலஸ்தீனர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 30 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் "போராளிகள் ஆதிக்கம் செலுத்தும் ஜெனின் அகதிகள் முகாமில் தேடுதல் வேட்டையில் இராணுவம் ஈடுபட்டது.

அப்போது இஸ்ரேல் பாதுகாப்புப்படையினரின் டிரோன்கள் அந்த பகுதியில் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலியர்களை தாக்கிய சம்பவத்தில் ஈடுபட்டதாக இரண்டு பாலஸ்தீனர்களை கைது செய்துள்ளனர். இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# பெருநாட்டில் வாட்டி வதைக்கும் வறட்சி

## 544 மாவட்டங்களில் அவசர நிலை பிரகடனம்

(லிமா)

**மத்திய மற்றும் கிழக்கு பசுபிக் கடலின் மேற்புறத்தில் ஏற்படும் அதிக படியான வெப்ப மயமாதலால் அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளில் பருவகால மாற்றங்களில் சில வருட கால இடைவெளிகளில் ஒரு சமச்சீரற்ற நிலை உருவாகிறது.இதன் காரணமாக அதிக வறட்சி அதிக மழைப் பொழிவு என வானியல் சூழல் நிலை மாறி மாறி திகழ்கிறது. இதனால் பெருநாட்டில் 544 மாவட்டங்களுக்கு அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.**




இந்நிகழ்வை "எல் நினோ" என சுற்றுச் சூழல் வல்லுநர்கள் அழைக்கின்றனர். பல வருடங்களாகவே இந்த சிக்கலை சமாளிக்க உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என வானிலை நிபுணர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந் நிலையில் பெரு நாட்டில், செப்டெம்பர் 13 அன்று அந் நாட்டின் தேசிய சிவில் பாது காப்பு நிறுவனம், நீர் நிலை குறித்த தனது தொழில் நுட்ப அறிக்கையில் எல் நினோ தாக்குதல் 2024 கோடை காலம் வரை இருக்கும் என எச்சரித்தது. இதனையடுத்து பெரு நாட்டில் நேற்று முன்தினம் தொடங்கி 2 மாத காலத்திற்கு 544 மாவட்ட ங்களுக்கு அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

வரவிருக்கும் எல் நினோ நிகழ்வினால் அங்கு பெரும் வறட்சியும் அதன் காரணமாக குடிநீர் தட்டுப்பாடும் வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களும் அதிகம் ஏற்பட விருப்பதாக வல்லுநர்கள் தெரிவித்திருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நிலைமையை சமாளிக்க அந் நாட்டின் மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்க அமைப்புகளும் தேசிய சிவில் பாதுகாப்பு நிறுவனமும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. இந்நிலையில் அமெரிக்காவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் பொது சபையின் சந்திப்பில் பேசிய பெரு நாட்டு ஜனாதிபதி டினா பொலுவார்டே எல் நினோ நிகழ்வை எதிர் கொள்ள பன்னாட்டு கூட்டு முயற்சியும் ஒப்பந்தமும் அவசியம் என வலியுறுத்தினார்.(நி-5)

# இந்தியா- கனடா இடையே வலுக்கும் விரிசல் நிலை

## இந்திய பயணங்களை தவிர்க்குமாறு கனடா அறிவுறுத்து



(ஒட்டாவா)

பிரிட்டிஷ் கொலம்பியாவில் சீக்கிய மதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜர் என்பவர் கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டார்.

இக்கொலையில் இந்தியாவுக்கு தொடர்புள்ளதாக கனடா குற்றம்சாட்டியது. இதனால் இந்தியா, கனடா இடையே உறவு விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்திய தூதரக அதிகாரியை வெளியேற கனடா உத்தர்விட, அதற்கு பதிலடியாக கனடா தூதரக உயரதிகாரியை வெளி யேற்ற மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது.

இந் நிலையிலேயே அத்தியாவசிய தேவையின்றி இந்திய பயணத்தை கனேடியர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் தகுந்த பாது காப்புடன் இந்தியாவிற்கு, குறிப்பாக ஜம்மு-கஷ்மீர் போன்ற பதற்றம் மிக்க பகுதிகளுக்கு எச்சரிக்கையுடன் பயணம் மேற் கொள்ள வேண்டும் என தனது நாட்டு மக்களை கனடா அறிவுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, இந்தக் கொலையில் இந்தியா மீது கனடா அரசு குற்றம் சாட்டியதற்கு அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. (நி)

நத் தாக்குதலில் இஸ்ரேல் இராணுவத்தை சேர்ந்தவர்களுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை" எனத் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்தின் ரமல்லா பகுதி சுகாதாரத்துறை அமைச்சகம், மூன்று இளைஞர்கள் உயிரிழந்ததாகவும், 30 பேர் காயம்அடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

முன்னதாக, இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையிலான பாதசாரிகள் பயன்படுத்தும் பாதையை இஸ்ரேல் இராணுவம் மூடியதால் 25 வயது பாலஸ்தீனர், காசா முனையில் போராட்டத்தில் ஈடுபட்டபோது இஸ்ரேல் குண்டுக்கு பலியானார். (நி-5)

# இனப்படுகொலையை தோற்றுவிக்கும் ரஷ்யா ஐ.நா.பொதுச் சபையில் ஜெலன்ஸ்கி ஆவேசம்

(நியூயோர்க்)

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான போரானது தொடர்ந்து, நீடித்து வருகிறது. இதில், இரு தரப்பிலும் பலர் உயிரிழந்து வருகின்றனர். தூதரக அளவிலான அமைதி பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிந்தது. எனினும் போரானது நிற்காமல் தொடருகிறது.



இந்நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 78 ஆவது ஐ.நா. பொது சபை கூட்டத் தொடர் நடைபெற்றது. அதில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கலந்து கொண்டு பேசும்போது, ரஷ்யாவில் உள்ள உக்ரைனிய குழந்தைகளை திரும்ப சொந்த நாட்டுக்கு கொண்டு வர நாங்கள் முயற்சித்து வருகிறோம். ஆனால், காலம் கடந்து செல்கிறது.

ரஷ்யாவில் உள்ள அந்த குழந்தைகளுக்கு உக்ரைனை வெறுக்கும்படி கூறப்படுகிறது.

அவர்களுடைய குடும்பத்தினருடனான உறவுகள் முறிகின்றன. இது தெளிவாக ஒரு இனப்படுகொலை என்று பேசியுள்ளார்.

ரஷ்யாவுடன் பகைமை தொடர்ந்தபோதிலும், அமைதி திட்டம் பற்றியும் நவீன வரலாற்றில் முதன்முறையாக, தாக்குதலுக்கு உள்ளான தேசத்தின் மீது தொடுக்கப்பட்ட படையெடுப்பை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உண்மையில் ஒரு வாய்ப்பு எங்களுக்கு உள்ளது என்றும் கூறியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் எப்படி மற்றினாலும் எதிர்ப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் அரசாங்கம் எவ்வாறான மாற்றங்களை மேற்கொண்டாலும் எதிர்க்கட்சி அதனை எதிர்க்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சட்டமூலத்தை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள போதிலும் திருத்தங்களுடன் அரசாங்கம் அதனை இன்னமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் பாராளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டதும் அதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்வதற்கு இரண்டு வாரங்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமூலம் திருத்தப்பட்டாலும் நாங்கள் நீதிமன்றம் செல்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவேளை அது பொருத்தமற்றது என தெரிவித்து பல தரப்பினர் நீதிமன்றம் சென்றனர். சர்வதேச அளவிலும் அது நிராகரிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# வங்குரோத்திலிருந்து நாட்டை மீட்க தவறுகளை திருத்தி முன்னேற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் வஜிர

(கொழும்பு)

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டெடுக்க தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய வேளையில் அந்தப் பயணத்தில் வெறுப்பும் கோபமும் கலந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணம் குறித்து விசாரிக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் வெளியிட்ட அறிக்கையை திரித்து நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளை அவமதிக்கும் வகையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தாம் வருத்தம் தெரிவிப்பதாக வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் பல தடவைகள் நாட்டின் நிலைமையை விளக்கியதாகவும் எந்தவொரு நிதிய மைச்சு அதிகாரியின் பெயரையும் தாம் குறிப்பிடவில்லை எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

வங்குரோத்து அடைந்த நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளுக்கு நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆதரவை வழங்கி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 450 | 500 |
| தக்காளி | 160 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| கோவா | 160 | 140 | 160 | 160 |
| கரட் | 300 | 280 | 260 | 300 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 70 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 100 | 160 | 150 | 200 |
| லீக்ஸ் | 160 | 130 | 160 | 150 |
| பீற்றூட் | 140 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 100 | 100 |
| போஞ்சி | 420 | 450 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | 160 |
| கீரை – 1 பிடி | 60 | 40 | 50 | 100 |
| தேசிக்காய் | 1000 | 900 | 1000 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 280 | -- | 350 |
| முள்ளங்கி | 80 | 80 | -- | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 60 |

# புரட்டாதி மாத இராசி பலன்கள் 18.09.2023-17.10.2023

## சிம்மம்

**மக்கள் சேவையே மகேசன் சேவை என்று சொல்லும் சிம்ம இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன், யோககாரகன் செவ்வாயோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அதுமட்டுமல்ல இராசியிலேயே தன-லாபாதிபதி புதனும் இருக்கிறார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. தொழில் வளர்ச்சி திருப்தி தரும். தொடர்ந்து இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும் சந்தர்ப்பங்கள் எல்லாம் சாதகமாகவே அமையும் நேரம் இது.

### புதன் வக்கிரம்

புரட்டாசி 10 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. புதன் உச்சம் பெற்று வக்கிரம் பெறுவதால் பொருளாதாரத்தில் தட்டுப்பாடு அதிகரிக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழல் உருவாகும். மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்புகள் ஏற்பட்டு அகலும். சேமிப்புக் கரைந்தாலும் அது சுபச்செலவாகவே மாறும். தொழில், உத்தியோகத்தில் திடீர் இட மாற்றம் ஏற்படலாம். உத்தியோக முயற்சிக்காக ஏற்பாடு செய்தவர்களுக்கு புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்பு கள் வரலாம்.

### துலாம் - செவ்வாய்

புரட்டாசி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 4, 9 இற்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் சகாய ஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். இடம் வாங்குவது, வீடு கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்தும் நேரம் இது. பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். தந்தை வழியில் இருந்த உறவு பலப்படும். ஒரு சிலருக்கு பெற்றோர் வழியில் தொழிலுக்கான மூலதனம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்தைப் பற்றி சக ஊழியர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். தொழிலில் பங்குதாரர்கள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்.

### துலாம் - புதன்

புரட்டாதி 28 ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் வருகிறார். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும். தன - லாபாதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எந்தநேரத்தில் எதைச்செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும் நேரம் இது. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நம்பிக்கைகள் நடைபெறும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு பணம் சரளமாக புரளும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாணவ-மாணவிகளுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு மாதத் தொடக்கம் மகிழ்ச்சியாக அமையும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் கூடும். குடும்ப ஒற்றுமை குறையாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

## கன்னி

**அமைதியாக இருந்து கொண்டு அரிய பணிபுரியும் கன்னி இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே விரயாதிபதி சூரியன் மற்றும் செவ்வாயும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே வரவும் செலவும் சமமாகவே இருக்கும். எந்தச் செயலைத் தொடங்க நினைத்தாலும் அதற்குரிய பொருளாதாரம் கடைசி நேரத்தில் வந்து கைகூடிவிடும். 2 இல் கேது இருப்பதால் புது முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செய்வது நல்லது.

### புதன் வக்கிரம்

புரட்டாதி 10 ஆம் திகதி, கன்னி இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். அதேநேரத்தில் அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம், இதுபோன்ற வக்கிர காலங்களில் தான் யோகம் செய்யும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொடர்ந்து பொருளாதார நிலை உயரும். உறவினர்களின் ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். புகழ்மிக்கவர்கள் பின்னணியாக இருந்து .சில காரியங்களை முடித்துக் கொடுக்கலாம்.

### துலாம் - செவ்வாய்

புரட்டாதி 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து, தன் வீட்டைத் தானே பார்ப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பூமி யோகம் உண்டு. "வாங்கிய இடத்தை விற்க முடியவில்லையே, வில்லங்கம் இருக்கின்றதே" என்றெல்லாம் நினைத்தவர்களுக்கு இப்பொழுது புதிய திருப்பங்கள் ஏற்படும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் நல்லாதரவோடு கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சகோதர ஒத்துழைப்போடு நற்பலன்களைக் காணும் நேரம் இது.

### துலாம் - புதன்

புரட்டாதி 28 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிநாதன் 2 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாதிருந்த மங்கல நிகழ்ச்சிகள் இப்பொழுது நடைபெறும். இல்லம் கட்டிக் குடியேறுவதோ அல்லது வீடு வாங்கிக் குடியேறுவதோ உங்கள் எண்ணங்களைப் பொறுத்து அமையும். மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். சம்பள உயர்வு பற்றிக் கேட்டு சலிப்படைந்த உங்களுக்கு இப்பொழுது தானாக சம்பள உயர்வும் பதவி உயர்வும் வரலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு திருப்தி தரும். கலைஞர்களுக்கு விட்டுப்போன ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். மாணவ-மாணவிகளுக்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு செலவிற்கேற்ற வரவு வந்து சேரும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் மணல், ஊத்தை மண் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# ரூ.3 கோடி பெறுமதியான கொக்கைன் மன்னாரில் மீட்பு

## ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு இராஜப்பு ஜோசப் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பகுதியில் கொன்கைன் போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரும் அவரிடம் இருந்து 1 கிலோ 12 கிராம் கொக்கைன் வகை போதைப் பொருள் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அந்நபர் தாழ்வுபாடு பகுதியை சேர்ந்த 34 வயதுடையவர் என்பதுடன் சந்தேக நபரிடம் மன்னார் குற்றபுலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.



மேற்படி கைப்பற்றப்பட்ட கொக்கைனின் தற்போதைய சந்தை மதிப்பு 30 மில்லியனுக்கும் (3 கோடி) அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

## யாழ். பல்கலை கிளிநொச்சியில் சர்வதேச மாநாடு

(தருமபுரம்)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் "நவீன உலகத்தில் உணவு நெருக்கடியைத் தவிர்த்தல்" என்ற தொனிப்பொருளில் 9 ஆவது சர்வதேச உயர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கேட்போர் கூடத்தில் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி திருமதி.எஸ்.வசந்த ரூபா தலைமையில் நடைபெற்றது. (6-316)

# குடிமனைக்குள் புகுந்து காட்டு யானைகள் அடாவடி



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் குடிமனை ஒன்றுக்குள் புகுந்த யானைகள் பயன்தரும் மரங்களை சூறையாடி சேதம் விளைவித்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட திருவையாறு இரண்டாம் வீதி பகுதியில் வீடு ஒன்றின் தகர வேலியை உடைத்துக்கொண்டு வளாகத்துக்குள் புகுந்த யானை பயன் தரும் வாழை, மரவள்ளி போன்ற மரங்களை சேதமாக்கிசென்றுள்ளது.

குறித்த பகுதியில் தான் மீள்குடியேற்றத்தின் பின்னர் இவ்வாறான யானைகளின் அட்டகாசம் இடம்பெறுவதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.


மேலும் காட்டு யானைகள் குடிமனை பகுதிகளுக்கு வராதவாறு முட்கம்பி வேலிகளை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)

# வீதிப்போக்குவரத்து பொலிஸார் சிலநேரங்களில் கடமையில் இருப்பதில்லை

## பெற்றோர்கள் குற்றச்சாட்டு

(தருமபுரம்)

கிளிநொச்சி-முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் கற்கும் மாணவர்கள் பாடசாலை நிறைவடையும் நேரத்தில் வீதிக்கடவையூடாக கடக்க முற்படும் சமயம் வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.




குறித்த பாடசாலை முன்பாக காலையில் மாத்திரம் வீதி போக்குவரத்து பொலிஸார் கடமைக்கு வருவதாகவும் பாடசாலை முடிவடையும் நேரங்களில் கடமைகளில் இல்லாததால் மாணவர்கள் வீதியினை கடக்க முயலும் போது விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

எனவே ஏ-35 வீதி பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு பாடசாலையின் வீதிக் கடவைக்கு இரு நேரமும் பொலிஸார் ஒருவரை வீதி பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)

## திலீபனின் நினைவேந்தல் பவனிக்கு

# இடையூறு ஏற்படுத்தும் வகையில் மன்னாரில் சுவரொட்டிகள்



(மன்னார்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனி வடக்கு-கிழக்கில் மக்களின் நினைவேந்தலுக்கு சென்று வரும் நிலையில் ஊர்தி பவனி இவ்வாரம் மன்னாரை நோக்கி வருகை தரவுள்ள நிலையில் குறித்த நினைவேந்தல் பவனிக்கு இடையூறு விளைவிக்கும் விதமாகவும் ஊர்தி பவனியை குழப்பும் விதமாகவும் மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் மன்னார் பொது மைதானம், மன்னார் சதோச மனித புதைகுழி வளாகம், மன்னார் ரெலிகோமுக்கு அருகாமை உட்பட சில பகுதிகளில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டியில் தமிழ் ஈழத்திற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்துவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகளை மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் புலனாய்வாளர்களோ அல்லது அரசாங்கத்துடனோ, முப்படையினருடனோ இணைந்து செயற்படும் பிரிவினரே ஒட்டியிருக்கலாம் எனவும் இதை அடிப்படையாக வைத்து மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் மன்னார் பொலிஸார் தியாக தீபன் திலீபனின் நினைவஞ்சலிக்கும் ஊர்தி பவனிக்கும் தடை கோரும் வகையிலேயே இவ் சுவரொட்டி நாடகம் இடம்பெறலாம் என மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (நி-6-285)

## துரித அபிவிருத்தி திட்ட செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான துறை சார்ந்த துரித அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பது தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்துக்கான ஒருங்கிணைந்த துரித அபிவிருத்தி திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் வழிவகைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் வட மாகாணத்தின் மாவட்டங்களில் உருவாக்கப்படும் கருத்திட்டங்களை கொண்டு வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படும். இச் செயலமர்வில் வடமாகாண பிரதம செயலாளர் - திட்டமிடல், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவன அங்கத்தவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அப்பள்ளங்களில் தண்ணீர் கரகரவென்று சுழலும். அந்தச் சுழலில் படகு அகப்பட்டுக் கொண்டால் அரோகராதான்.

வந்தியத்தேவனுக்குத் திடீரென்று மனத்தில் ஒரு திகில் உண்டாயிற்று. அத்துடன் ஒரு சந்தேகமும் உதித்தது.

"ஐயோ! நான் வரவில்லை! என்னைக் கரையிலே கொண்டு போய் விட்டு விடு" என்று கத்தினான்.

"என்ன உளறுகிறாய்? பேசாமலிரு! பயமாயிருந்தால் கண்ணை மூடிக்கொள் இல்லாவிட்டால் படுத்தூங்கு!"

வந்தியத்தேவனுடைய சந்தேகம் இப்போது உறுதிப்பட்டது. "நீ பெரிய மோசக்காரி! என்னைக் கடலில் மூழ்க அடிப்பதற்காக அழைத்துப் போகிறாய். நான் தூங்கினால் உன் காரியம் மிகவும் சுலபமாகும் என்று பார்க்கிறாய்!"

"இது என்ன பைத்தியம்?"

"எனக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை! படகைத் திருப்புகிறாயா, இல்லையா? திருப்பாவிட்டால் கடலில் குதித்து விடுவேன்!"

"தாராளமாய்க் குதி! ஆனால் குதிப்பதற்கு முன்னால் பொன்னியின் செல்வனுக்கு நீ எடுத்துப் போகும் ஓலையை என்னிடம் கொடுத்து விடு!"

"ஓ! அந்த ஓலையைப் பற்றி உனக்கு எப்படி தெரிந்தது?"

"உன் இடுப்பில் சுற்றியிருக்கும் சுருளை அவிழ்த்துப் பார்த்ததில் தெரிந்தது. நீ யார், எதற்காக இலங்கை போகிறாய் என்று தெரிந்து கொள்ளாமல் உனக்குப் படகு தள்ளச் சம்மதித்திருப்பேனா? காலையில் மரத்தின் மேல் உட்கார்ந்து உன் அரைச் சுருளை அவிழ்த்து ஓலையைப் பார்த்தேன்."

"மோசக்காரி! உன்னை நம்பி வந்துவிட்டேனே! படகைத் திருப்புகிறாயா, மாட்டாயா?"

வந்தியத்தேவனுடைய திகிலும் வெறியும் பன்மடங்கு ஆயின. "படகைத் திருப்பு! படகைத் திருப்பு!" என்று அலறினான்.

"நான் மட்டும் இளைய பிராட்டி குந்தவையாக இருந்திருந்தால் இவ்வளவு முக்கியமான ஓலையை உன்னைப் போன்ற சஞ்சல புத்திக்காரனிடம் கொடுத்து அனுப்பியிருக்க மாட்டேன்!" என்றாள் பூங்குழலி.

"ஓகோ! ஓலை கொடுத்தது யார் என்று கூட உனக்குத் தெரிந்திருக்கிறதே! நீ வஞ்சகி என்பதில் சந்தேகமில்லை. படகைத் திருப்புகிறாயா? கடலில் குதிக்கட்டுமா?"

"குதி! தாராளமாய்க் குதி!" என்றாள் பூங்குழலி.

வெறி கொண்ட வந்தியத்தேவன் தொப்பென்று கடலில் குதித்தான். கரையோரத்தில் இருந்ததுபோல் தண்ணீர் கொஞ்சமாக இருக்குமென்று எண்ணிக் குதித்தான்.

அதற்குள்ளே படகு நீச்சு நிலை கொள்ளாத ஆழமான கடலுக்கு வந்துவிட்டது என்பதை அவன் அறியவில்லை. கடலில் குதித்த பிறகுதான் அதை அறிந்தான். அறிந்த பிறகு அலறித் தத்தளித்தான்.

இதற்குள் வந்தியத்தேவன் ஓரளவு நீந்தத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால் தண்ணீரைக் கண்டால் அவனுக்கு இயற்கையாக ஏற்படும் பயம், கை கால்களின் தெம்பைக் குறைத்தது. ஆற்றிலே குளத்திலே என்றால் பக்கத்தில் உள்ள கரையைப் பார்த்துத் தைரியம் கொள்ள இடமிருந்தது. இதுவோ மாகடல்.

நாலாபுறமும் எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர் மயம். கடலில் அங்கே இலேசான அலைதான். எனினும் ஒரு சமயம் அவனை மேலே கொண்டு வந்தது. இன்னொரு சமயம் பள்ளத்தில் தள்ளியது. மேலே வந்த போது படகு கண்ணுக்குத் தெரிந்தது.

'ஓ' என்று கத்தினான். பள்ளத்தில் விழுந்த போது படகு கண்ணுக்குத் தெரியவில்லை. சுற்றிலும் இருண்ட தண்ணீரின் சுவர் மட்டுமே தெரிந்தது. 'ஓ' என்று அலறும் சக்தியைக் கூட அவனுடைய நா இழந்துவிட்டது.

(தொடரும்...)




## மனக்கோட்டை மண்கோட்டை ஆச்சே



(நேற்றைய தொடர்ச்சி)

"இன்று காலையில் காற்று வலுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசிக்கொண்டு நகர்கிறது" என்று சொல்லிகொண்டே அடிக்கடி ராஜாவை பார்த்துக் கொண்டான். இந்த அற்ப சொற்களை கேட்டு அரசன் தனக்குள் சிரித்து கொண்டார். இந்த செய்திகளுக்கு அன்றாடம் ஐம்பது தங்கக்காசுகள் கிடைக்கின்றன என நினைத்துக் கொண்டார்.

தூண்டிற் புழுவைப் போல் துடிக்கும் ராஜா ராமனை தொடர்ந்தான். "முதன்மை அமைச்சர் ஏதும் முறைகேடாக நடக்கவில்லை. எல்லாம் நன்றாக போய்க் கொண்டிருக்கிறது" என்று கூறியதாக சொன்னான் ராமன். ராமனுக்கு நன்றி கூறி ஆயிரம் பொற்காசுகளை வழங்கினான் ராஜா. அடுத்த சில நாட்களில் மீதமுள்ள அனைத்து அமைச்சர்களையும் தனது கிலியால் ஆடவைத்தான் ராமன். சேனாதிபதி, தனாதிகரி, நீதிபதி என யாரையும் விடவில்லை. அனைவரையும் தனது கட்டுக்குள் வைத்திருந்தான். தினமும் அரசருக்கு ஐம்பது பொற்காசுகளை வழங்கிவிட்டு மற்ற மந்திரிகளிடம் ஆயிரக்கணக்கில் பொற்காசுகளை கறந்தான். பிறகு ஒரு நாள் அரசரும் அதிகாரிகளும் சாதாரண மக்களும் அரசவையில் கூடிருந்த போது ராமனும் அங்கு இருந்தான்.

அரசரின் முன் வந்து சொன்னான். "என் அரசே, இத்தனை நாள் தங்கள் காதுகளில் அர்த்தமற்ற வார்த்தைகளை சொன்னது நான்தான். இன்று அர்த்தமுள்ள ஒரு வார்த்தை சொல்ல வந்துள்ளேன். இந்த பையுடன் என்று கூறி மன்னர் முன்பே அந்த பட்டுப்பை ஒன்றை போட்டான். பத்தாயிரம் தங்கக்காசுகள் அதில், அரசருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "சற்று விளக்குவீராக" என்று உத்தரவிட்டார். ராமன் நடந்தவற்றை எல்லாம் கூறினான்.

தங்கக்காசு குவியலை பாருங்கள். உம்மை சூழ்ந்துள்ள பொய்க்கு உண்மையான சான்று இதுவே!. அமைச்சர்கள் அனைவரும் மனத்தூய்மை உள்ளவராயிருந்தால் தளபதி தன் பணியை உளமார செய்திருந்தால் தலைமை நீதிபதி லஞ்சம் வாங்காமல் இருந்திருந்தால் நான் அவர்களிடம் கூறிய பொய்களுக்கு பயந்து நடுங்கிருக்க மாட்டார்கள்.

மேலும் முதன்மை அமைச்சர் ஒரு கேடு கெட்டவர் என்றான் ராமன். மக்களும் அதற்கு ஆமோதித்தனர். தன் அதிகாரிகள் கும்பலில் ஒரு ஆள் கூட பதவிக்கு தகுதி இல்லை என அரசருக்கு புரிந்தது. எல்லோரும் லஞ்ச ஊழல் பிடித்தவர்கள்.

குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பதால் சதா கிலியில் ஆழ்ந்தார்கள். ராஜாவும் மற்ற மந்திரிகளும் சிறையில் அடைக்கப்பட்டனர். ராஜாவின் மண்ணாசை மண் கோட்டை போல சரிந்தது.

ராமன் முதன்மை மந்திரி ஆக்கப்பட்டான். மதி தெளிந்த மன்னனின் கீழ், கடமைப்பற்றும் கண்ணியமுமாய் பணி புரிந்திட நல்லவர்கள் குழு ஒன்றை ராமன் விரைவிலே சேர்த்துக் கொண்டான். நாடு செழித்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுபக்கிரகங்கள் பகைப்பது ஜாதகனுக்கு பாதகமானது

சோதிடம் என்பது கணித்தல் எனும் பொருளைக் குறிப்பதாகும்.

ஒருவரின் ஜனன ஜாதகத்தில் கிரகங்கள் இருக்கக்கூடிய நிலைகளின் அடிப்படையில் அவரின் பலன்கள் எவ்வாறாக அமையும் என்பதை சோதிட வல்லுநர்கள் மிகத் துல்லியமாகக் கணித்துக்கூறுவர்.

இருந்தும் சோதிடத்தின் மீதான நம்பிக்கையும் அதனைக் கணிப்பவர்களின் துறைசார் அறிவும் சோதிடத்தின் இருப்பைத் தீர்மானிக்கும்.

அதேநேரம் கிரகங்களில் நன்மை தரக்கூடியவை, கேடு விளைவிக்கக்கூடியவை என இரு தரப்பாகச் சோதிடம் வகுத்துள்ளது.

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்றொரு சோதிடப் பழமொழி உண்டு.

அதாவது ஒரு ஜாதகத்தில் கெட்ட கிரகங்கள் கெட்டுப்போக வேண்டும். அப்போதுதான் அந்த ஜாதகக்காரன் நன்மை அடைய முடியும்.

மாறாக கெட்ட கிரகங்கள் வலிமை பெற்றிருந்தால், ஜாதகனுக்கு அது பாதகம் செய்யும்.

அதேபோல இராஜயோகங்களைத் தரக்கூடிய சுபக்கிரகங்கள் ஒன்றோடு ஒன்று பகைத்துக் கொள்ளுமாயின், அதுவும் ஜாதகனுக்கு பெரும் பாதகமே.

இதை நாம் கூறும்போது, இதற்கு நடைமுறை உதாரணம் சொல்லுக என்று நீங்கள் கேட்டால்,

இப்போது இலங்கைத் தமிழர்களுக்கு கனடா அரசாங்கம் மிகுந்த பக்கபலமாக உள்ளது.

இலங்கையில் தமிழினப் படுகொலை நடந்தது என கனடாப் பிரதமர் அண்மையில் கூறியிருந்த விடயம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது.

கூடவே சிங்களப் பேரினவாதிகளும் அது குறித்து கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

ஆனாலும் இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலை என்பதை முதன்முதலில் வெளிப்படையாகக் கூறிய நாடு கனடா என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அதேநேரம் ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கு இந்தியாவின் ஆதரவும் ஆசியும் இல்லாமல் விமோசனம் இல்லை.

எனவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுவார் என்ற நம்பிக்கையோடு ஈழத் தமிழர்களாகிய நாம் காத்திருக்கின்றோம்.

ஆக, ஈழத் தமிழர்களுக்கு முதன்நிலை ஆதரவான இரண்டு நாடுகள் என்றால், அவை இந்தியாவும் கனடாவுமே.

நிலைமை இதுவாக இருக்கையில், காலகஷ்டம் போல இந்தியாவும் கனடாவும் பகைக்கத் தொடங்கியுள்ளன.

இந்தப் பகைமை முற்றுவதுபோலத் தெரிவதுதான் மிகப்பெரிய அபத்தம்.

ஆம், ஈழத் தமிழர்களாகிய எமக்கு ஆதரவு தரக்கூடிய இரண்டு நாடுகள் தமக்குள் பகைத்துக் கொள்வது எங்களுக்கு பெரும் பாதகமாக அமையும்.

இதுதான் இரண்டு சுபக்கி[illegible]கள் பகைத்துக் கொண்டால், அது ஜா[illegible]கார னுக்கு பாதகம் என்பதற்கான உதாரண[illegible]ம்.

ஆகவே கனடாவும் இந்தியாவும் முரண்பாட்டு நிலையில் இருப்பது நமக்கு நல்லதல்ல, என்பதால் தக்க பரிகாரம் செய்வது நம் கடமையாகும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை கோட்டா போன்று ரணிலும் மூடி மறைப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை கோட்டபாய ராஜபக்ஷ மறைத்ததைப் போன்று ரணிலும் மறைக்கின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற எதிர்க்கட்சி வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை கோட்டபாயவும் மறைத்தார், இப்போது ரணிலும் மறைக்கின்றார். நாம் எப்படியாவது உண்மையை வெளியில் கொண்டுவர வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையும் அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் அரசியலாக்காது முழுமையான உண்மையைத் தேடுவதே எதிர்க்கட்சியின் நோக்கம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரிகளையும் ஏனைய காரணத்தை கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அனைவரையும் தண்டிப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ அளித்த வாக்குறுதியினாலேயே தேர்தலில் அவருக்கு 69 இலட்சம் மக்களின் ஆதரவு கிடைத்தது. ஆனால் அதன் பின்னர் நடந்ததோ வேறு.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகளை பார்க்கும் போது உண்மையை தேடுவதை விட உண்மை மறைக்கப்படுவதே வாடிக்கையாக உள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் போன்றே தற்போதைய அரசாங்கமும் உள்ளது. கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, தேசிய விசாரணைகள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எனவே இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் பிரதான சந்தி பகுதியில் தீர்வை வரி செலுத்தாமல் நாட்டுக்குள் சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி வெளிநாட்டு சிகரெட் பெட்டிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்பிட்டி பகுதியில் இருந்து மன்னார் நகரில் உள்ள இரவு உணவகங்களுக்கு விற்பனைக்கு செய்வதற்காக இவை கொழும்பு -மன்னார் பேரூந்தில் கடத்தி வந்த போது உயிலங்குளம் பகுதியில் குறித்த நபரை மன்னார் மாவட்ட குற்றப்தடுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் பகுதியை சேர்ந்த 25 வயதான நபர் என்பதுடன் அவரிடம் மன்னார் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் சான்று பொருள் மற்றும் சந்தேகநபரை முன்னிலைப்படுத்த உள்ளனர்.

சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து 2,900 எண்ணிக்கை உடைய சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் தற்போதைய சந்தை மதிப்பு 5 லட்சம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

### யாழ் ஆனைக்கோட்டையில்
## வாகன சாரதியை தாக்கிய மூவர் பொலிஸாரால் கைது

(மானிப்பாய்)

பட்டா ரக வாகனத்தை வழிமறித்து, அதன் சாரதியை கடுமையாக தாக்கிய குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு வீதியில் பயணித்த பட்டா ரக வாகனத்தை மோட்டார்ச்சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய கும்பல் வழிமறித்து , சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்று இருந்தது.

சம்பவத்தில் காயமடைந்த சாரதி , சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் மானிப்பாய், கல்வியங்காடு மற்றும் மணியந்தோட்டம் பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர். (ம-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளத்தில் மின்சாரம் தடைப்படும்.

## வாகன விபத்தில் இளைஞன் படுகாயம்
### நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி குஞ்சர் கடையடி சந்தியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர் அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த சிவரட்ணம் தயாளன் (வயது- 36) என்பவராவார்.

மோட்டார் சைக்கிளும் முட்டை ஏற்றி வந்த வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ் விபத்து தொடர்பில் நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## யாழில் திருட்டில் ஈடுபட்டவர் கைது

யாழ். நகர் பகுதியில் வீடொன்றில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகர் பகுதியை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 16 ஆம் திகதி திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதன் போது வீட்டில் இருந்த பெறுமதியான கையடக்க தொலைபேசி ஒன்றும், ஒரு தொகை பணமும் திருடப்பட்டு இருந்தது.

அது தொடர்பில் உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் , குறித்த வீட்டில் திருடப்பட்ட கையடக்க தொலைபேசியும் , ஒரு தொகை பணத்தினையும் மீட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைங்களை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக

## இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



1824 இல் பிரித்தானியாவின் நேரடி ஆட்சியினுள் வந்தது. 1826 இல் தென்கிழக்காசியாவின் ஒரு பிரித்தானிய குடியேற்ற நாடாக ஆனது. இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்களால் சிறிது காலம் ஆக்கிரமிக்கப்பட்ட சிங்கப்பூர் மறுபடியும் 1945 இல் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது.

பல கட்டப் பேச்சுவார்த்தை, கையெழுத்து இயக்கம், மக்கள் கிளர்ச்சி, தலைவர்களின் தொடர் வலியுறுத்தல், இரண்டாம் உலகப் போரின் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிங்கப்பூருக்கு 1959ஆம் ஆண்டு விடுதலை கொடுத்தது பிரிட்டன் அரசு.

### சிங்கப்பூர் மலேசியா கூட்டமைப்பில் இணைதலும் விலகலும்

சிங்கப்பூரை மலேசியாவுடன் இணைப்பதற்கு பலகட்ட முயற்சிகளை மேற்கொண்டார் லீ. அதையொட்டி வானொலி, பொதுக்கூட்டம் வழியாக மலேசியாவுடன் இணைவதால் சிங்கப்பூருக்கு ஏற்படப் போகும் நன்மைகளைப் பட்டியலிட்டார். மக்களும் லீ சொல்வதில் உள்ள நியாயங்களைப் புரிந்து கொண்டு ஆமோதித்தனர். 1963 ஆம் ஆண்டு சிங்கப்பூர் அதிகார பூர்வமாக மலேசிய கூட்டரசில் இணைந்தது. லீயின் நெடுநாள் கனவு நிறைவேறியது.

"அப்பாடா..." என சிங்கப்பூர் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்குள் அடுத்தடுத்த பிரச்சினைகள் வரிசை கட்டியது. "நாங்கள் மலேசிய அரசியலில் தலையிட மாட்டோம். அதேசமயம் நாங்கள் சுதந்திர நாடாகச் செயற்பட விரும்புகிறோம்" என லீ பேசினார். லீயின் இந்தப் பேச்சை மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் ரசிக்கவில்லை. ஆரம்பத்திலேயே சிங்கப்பூரை தட்டிவைக்க வேண்டும் என முடிவு கட்டிக் கொண்டார்.

அதற்குள் சிங்கப்பூரின் வலுவான தலைவராக லீ குவான் உருவாகிவிட்டார். சிங்கப்பூர் மக்களுக்காக பல திட்டங்களை நிறைவேற்றி வந்தார். அவரின் மக்கள் நலத் திட்டங்கள் சிங்கப்பூரில் வாழும் மலாய், சீனம், தமிழ் மக்களுக்குப் பெரும் நம்பிக்கையைத் தந்தது. இதனால் லீயின் செல்வாக்கு சிங்கப்பூரை தாண்டி மலேசியா வரை பரவியது. இது மலேசிய ஆட்சியாளர்களைக் கலவரப்படுத்தியது.

எப்படியாவது இவரை கூட்டரசில் இருந்து கழற்றிவிட வேண்டும் என உள்ளுக்குள் சத்தியம் செய்து கொண்டனர். அதனால், முதலில் மறைமுக நெருக்கடிகளை கொடுக்க முடிவு செய்தனர். சிங்கப்பூரில் இருந்து மலேசியா செல்லும் பொருட்களுக்கு அதிகபடியான வரி விதிக்கப்பட்டது. இதற்கு லீ கடும் ஆட்சேபனை தெரிவித்தார். அதையெல்லாம் மலேசிய அரசு கண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில் தான் மிக மோசமான ஒரு இனக் கலவரம் சிங்கப்பூரில் நடந்தேறியது. இக்கலவரமே சிங்கப்பூர் தனித்து விடப்படுவதற்கான தொடக்கப் புள்ளியாக இருந்தது.

1964 ஆம் ஆண்டு, சிங்கப்பூரின் பதாங் பகுதியில் நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அப்போது சீனர்களுக்கும் மலாய்களுக்கும் இடையில் திடீர் கலவரம் வெடித்தது. பிரச்சினையில் பல உயிர்கள் பலியாகின. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இது மலேசிய சிங்கப்பூர் அரசுகளுக்கு மத்தியில் பதற்றத்தை உண்டாக்கியது. குற்றச்சாட்டுகள் இரு தரப்பின் மீதும் வைக்கப்பட்டது.

மலேசியாவோ ஒரு படி மேலே போய் சிங்கப்பூரை வெட்டிவிட்டால் தான் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு என்றது. லீ அவசரப்பட்டு எந்த வார்த்தைகளையும் கொட்டிவிடவில்லை. ஆனால் இந்தக் கலவரங்களுக்கு சிங்கப்பூரர்கள் மட்டும் காரணமில்லை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்தார். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சிங்கப்பூரை குற்றம் சாட்டினர் மலேசிய ஆட்சியாளர்கள். மீண்டும் இன்னொரு இனக்கலவரம் மூண்டது. அவ்வளவு தான் இனிமே ஒத்துவராது எனத் துண்டை உதறி தோளில் போட்டது மலேசியா.

மலேசிய நாடாளுமன்றத்தில், சிங்கப்பூரை வெளியேற்றுவது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 126 இற்கு பூஜ்யம் என்ற அளவில் வாக்களித்து சிங்கப்பூரை வெளியேற்றியது மலேசியா. லீயின் இதயம் ஒருகணம் நின்று துடித்தது. மலேசியாவின் முடிவை மறுபரிசீலனை செய்யும்படி எவ்வளவோ கேட்டுக் கொண்டார். வெட்டிவிட சமயம் பார்த்துக் கொண்டிருந்த மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரகுமானின் காதுகளுக்கு, லீயின் கவலைக் குரல் எட்டவில்லை. "எங்களை தனியாக விட்டுவிட வேண்டாம்" என லீ தனக்குத் தெரிந்த மலேசிய அரசியல் பிரதிநிதிகளிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். எதற்கும் மலேசிய அரசு இறங்கி வரவில்லை. லீ இவ்வளவு கெஞ்சுவதற்கு அர்த்தம் இல்லாமல் இல்லை.

சிங்கப்பூரின் காற்று மட்டுமே கைவசம் இருந்தது. வேறு எந்த உதவியும் இயற்கை செய்து கொடுக்கவில்லை. மிகக் குறைவான இயற்கை வளங்களைக் கொண்ட தேசமாக சிங்கப்பூர் இருந்தது. தன் தேவைகளுக்கு அண்டை நாடான மலேசியாவையே பெரும்பாலும் சார்ந்திருந்தது. குடிநீர் கூட மலேசியாவில் இருந்துதான் கொண்டுவரப் பட்டது. இப்படிப்பட்ட நிலையில், இந்தப் பிரிவினை லீயை மிகவும் பாதித்தது.

1965 ஒகஸ்ட் 9 ஆம் திகதி, மலேசிய கூட்டரசில் இருந்து சிங்கப்பூர் வெளியேறியதாக லீ பத்திரிகையாளர் முன்னிலையில் அறிவித்தார். அப்போது, "இந்தப் பிரிவினையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் வாழ்க்கை முழுதும் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்தே இருக்க வேண்டும் என்று கருதினேன். பொருளாதாரம் மற்றும் புவிப் பரப்பின் அடிப்படையில் இருதரப்பு மக்களும் ரத்த உறவினர்கள். ஆனாலும் இந்தப் பிரிவு நடந்தேறிவிட்டது" என உடைந்து அழுதார் லீ. இந்த நாள்தான் சிங்கப்பூரின் தேசிய நாளாக அனுசரிக்கப்படுகிறது.

பிரிவுக்குப் பிறகு ஒரு வார காலம் பொதுவெளியில் லீ குவான் தோன்றவில்லை. செய்வதறியாது திகைத்து நின்றார். சில நாட்கள் கழிந்தது. புது மனிதனாக போர்வையை உதறி வெளியே வந்தார். "அடுத்து என்ன செய்ய வேண்டும்" என்பதில் மிகத் தெளிவாக இருந்தார்.

மலேசியப் படைகள் சிங்கப்பூர் எல்லையில் இருந்து வெளியேறியதால் எல்லைப் பாதுகாப்பு கேள்விக்குறியானது. எப்போதும் சிங்கப்பூரை விழுங்கக் காத்திருந்தது பக்கத்து நாடான இந்தோனேஷியா. சில காலம் பிரிட்டனிடம் படை உதவி கேட்டு ஒப்பந்தம் போட்டார். ஒப்பந்தம் முடிவதற்குள் ராணுவப் பாதுகாப்பை உறுதி செய்தார். அன்றிலிருந்து சிங்கப்பூரின் வளம் பெருமளவு விரிவடைந்து வந்துள்ளது.

அவற்றின் காரணமாக, அதே 1965ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9ஆம் திகதி, மலேசியக் கூட்டமைப்பில் இருந்து சிங்கப்பூர் விலகி இறைமையுள்ள ஒரு நாடானது. யூசோப் பின் இசாக் சிங்கப்பூரின் முதலாவது தலைவர் ஆனார். லீ குவான் யூ பிரதமராகத் தொடர்ந்தார்.

சிங்கப்பூர் தன்னிறைவு பெற முயன்ற வேளையில், மலேசியக் கூட்டமைப்பில் இருந்து விலக வேண்டிய இக்கட்டான நிலைமை. அந்தக் கட்டத்தில் சிங்கப்பூரில் பெருமளவிலான வேலையில்லாமை, வீடு மனைகள் பற்றாக்குறை, நிலம் மற்றும் இயற்கை வளப் பற்றாக்குறை அதிகமாக இருந்தன. இவ்வாறான பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

தனி நாடாக உருவான போது கட்டமைப்புகள் ஏதும் இல்லாத, உணவுப் பொருள் உற்பத்தி செய்ய இயலாத வெற்றுப் பரப்பாகவே இருந்த இந்நாடு சமீப தசாப்தங்களாக உலக அளவில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள நாடுகளின் வருடாந்திரப் பட்டியலில் தொடர்ந்து முதல் ஐந்து இடங்களுக்குள் இருக்கிறது. இம்மாற்றத்தைச் செய்தவர் சிங்கப்பூரின் தந்தை என வர்ணிக்கப்படும் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற லீ குவான் யூ ஆவார்.

### சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ

லீ குவான் யூ (Lee Kuan Yew) சிங்கப்பூர் குடியரசின் முதல் பிரதமர் (1959 - 1990) ஆவார். இவரை சிங்கப்பூரின் தந்தை எனச் சொல்லுவர். இவர் சிங்கப்பூர் மக்கள் செயல் கட்சியின் (PAP) நிறுவனர்களுள் ஒருவரும் ஆவார். நவம்பர் 12 ஆம் நாள் 1954 ஆம் வருடம் மக்கள் செயல் கட்சியை நிறுவினார். 1959 முதல் 1990 வரை இவரது மக்கள் செயல் கட்சியை 7 முறை வெற்றி பெற வைத்தவர்.

1990இல் மக்கள் செயல் கட்சியின் கோ சோக் தோங்கு பிரதமராக இருக்கும் போது இவர் அதில் ஒரு முதுநிலை அமைச்சராகப் பணியாற்றினார். சிங்கப்பூரின் மூன்றாவது பிரதமரான லீ சியன் லூங், இவரின் மகன் ஆவார். லீ குவான் யூ பிரதமர் ஆட்சியில் இருந்து விலகிய பின்னரும் சிங்கப்பூரின் மிக முக்கியமான அரசியல்வாதியாக இருந்தார். பின்னர் 2004 முதல் 2011 வரை இவருக்காகவே உருவாக்கப்பட்ட மதியுரை அமைச்சர் (Minister Mentor) பதவியில் பணியாற்றினார்.

சிங்கப்பூர் சுதந்திரத்திற்கு முன்னான 1948 ஆம் ஆண்டு தேர்தலில் "தஞ்சோங் பாகர்" தொகுதியில் வென்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். 1959 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இவரின் மக்கள் செயல் கட்சி மொத்தமுள்ள 51 இடங்களில் 43 இடங்களில் வெற்றி பெற்றது. இவ்வெற்றியினால் "லி குவான் யூ" ஜூன் 3 ஆம் நாள் 1959இல் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிக்கு...

மூன்று இலட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்துமாறும் கிளிநொச்சி மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் கடந்த 2016ஆம் ஆண்டு பதினாறு வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய ஒருவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்தியதுடன் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.

இது தொடர்பில் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றதுடன் நேற்று தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கானது நேற்றுப் பகல் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.எம்.ஏ. சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

சிறுமியின் வாக்குமூலமும் சாட்சியங்கள் மூலமும் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கை என்பவற்றின் மூலம் மன்று குறித்த நபரை குற்றவாளியாக இனம் கண்டு நேற்று தீர்ப்பை வழங்கியுள்ளது. இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபருக்கு பத்து ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுதுடன் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 12 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று இலட்சம் ரூபாய் இழப்பீடு செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் 24 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம-7,315)



















## சதொசவில்...

துள்ளது.

அதன்படி ஒரு கிலோ சோயாமீட் 45 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 580 ரூபாயாக்வும் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 40 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 290 ரூபாயாக வும் விற்கப்படுகின்றது.

அத்தோடு ஒரு கிலோ நெத்தலி 30 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 1,100 ரூபாயாகவும் ஒரு கிலோ பூண்டு 30 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 620 ரூபாயாகவும் விற்கப்படுகின்றது.

மேலும் ஒரு கிலோ வெங்காயம் 15 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 195 ரூபாயாக விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## துன்னாலையில்...

சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேம்படி, துன்னாலை தெற்கைச் சேர்ந்தவர் களான ஜெயசீலன் ஜெதீசன் (வயது-31) சின்னத்துரை செல்வராசா (வயது-50) ஆகிய இருவரும் தலை மற்றும் கால் பகுதிகளில் ஆழமான வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## நல்லூரில்...

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள "தியாக தீபம்" திலீபனின் நினைவுத் தூபியில் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக காலை 9 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்று தியாக தீபம் திலீபனின் 6ஆம் நாள் நினைவேந்தல் இடம்பெற்றது. இதன்போது மாவீரர் ஒருவரின் தாயார் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து நினைவுத் தூபிக்கு அருகில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வு பிரிவினர் கடமையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வவுனியாவில்...

யில் உணர்வெழுச்சியுடன் மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் "திலீபன் வழியில் வருகின்றோம்" எனும் ஊர்திப் பவனியானது அம்பாறை பொத்துவிலில் ஆரம்பித்து 6 ஆவது நாளான நேற்று வவுனியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றிருந்தது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், வெளிநாட்டு பிரஜைகள், வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் ஊர்தியை வரவேற்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் வவுனியாவின் நெடுங்கேணி, புளியங்குளம், ஓமந்தை, வவுனியா நகரம், குருமன்காடு, தாண்டிக்குளம், பம்பைமடு, வைரவபுளியங்குளம், திருநாவற்குளம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் குறித்த ஊர்தி சென்ற நிலையில் அங்கும் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் உணர்வெழுச்சியுடன் தியாக தீபத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ம-7,250)

## திலீபன்...

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆறு பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டு பொலிஸார் இந்த மனுவை தாக்கல் செய்தனர். தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவு கூரும் செயற்பாடு இலங்கை சோசலிச குடியரசின் வர்த்தமானி 1721/2ஐயும், 2007ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாகவும் உள்ளது என்றும், நடத்தப்படும் பேரணியை 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது இவ் வழக்கை நீதவான் நீதிமன்ற நீதவான் தள்ளுபடி செய்தார். (ம-7,33,104)

## வட...

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.


வட மாகாணத்தில் காணிகளை விடுவிப்பதற்கு இணக்கப்பாடு காணப்படுகின்ற போதிலும் அவ்வாறு இடம்பெறுவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து பதிலளித்து கருத்துரைத்த வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, காணிகளை விடுவிக்கும் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள முடியும்.

குறித்த காணிகள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் முழுமையாக கையளிக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அரசாங்க அதிபர்களின் ஊடாக மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், குறித்த செயற்பாடு தங்களது மக்களுக்கு நன்மையளிக்கும் விடயமாக அமையும் என குறிப்பிட்டார். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17099) 076 825 7716 (ஆகாஸ்)



## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பாதுகாப்பு நிறுவனத்திற்கு இலங்கை மின்சார சபை சுன்னாகத்தில் வேலை செய்வதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

(15 வெற்றிடங்கள்)

Walking Interview

18.09.2023 தொடக்கம் 30.09.2023

இடம் : 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல - 077 054 1323 (17149)



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=

வடமராட்சி - கொழும்பு 2,700/= (17019)


T.P: 077 544 8503



## யாழ்ப்பாணம் - சென்னை

Flight Tickets

APEX TRAVELS



யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கான விமானப் பயணச்சீட்டுக்கள் இப்பொழுது 56,699/-

மிகக் குறைந்த விசேட விலையில் கொள்வனவு செய்ய இன்றே நாடுங்கள்.

தொடர்புகளுக்கு :- 0777 597 597 (17166)

APEX TRAVELS 076 3333 644



## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5392, 076 315 6470



## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7293)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777



## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7293)

0777-068-777

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் V2 TRAVELS



## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.

- காசாளர் (முன்அனுபவம் உள்ளவர்கள்)
- பொதி செய்பவர்கள் (முன்அனுபவம் உள்ளவர்கள்)

T.T.R சுப்பர் மாட்

85, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.

077 355 1631 (17165)



## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதியில் இருந்து 50 மீற்றர் தொலைவில் (17164)

077 923 1945



## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17142)



## சிங்கள வகுப்பு


- தரம் 6 - 11 வரையான பாடநூல் வகுப்பு.
- தொழில் செய்வோர், பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்களுக்கான வகுப்பு.

zoom

077 430 2181

070 138 0773 (17160)


# மரண அறிவித்தல்



பிறப்பு 20 - 11 - 1933

இறப்பு 20 - 09 - 2023

## செல்லப்பா சுப்பிரமணியம் தியாகராசா (CTB சாரதி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் தியாகராசா அவர்கள் நேற்று (20.09.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சிவநாயகம் தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் (தேவி) பாசமிகு கணவரும் ஜெயராசா (கனடா), காலஞ்சென்றவர்களான இரத்தினவல்லி, சர்வகுலராசா, மகேந்திரராசா மற்றும் சுந்தரராசா, சிவராசா (கொலண்ட்) ஆகியோரின் சகோதரரும் சுசிலாதேவி, ரவீந்திரன், லலிதா, விமலா, சுமதி, ஜெயரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் சித்தன்கேணி இல்லத்தில் இன்று (21.09.2023) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

(C-7294)





## மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம்

## பிராயச்சித்த அபிடேக விஞ்ஞாபனம்

எதிர்வரும் 22.09.2023 (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி விசேட பூஜைகள் இடம்பெற்று அம்பாள் மங்கள வாத்தியங்களுடன் உள்வீதி, வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

நிர்வாகம்

ஸ்ரீ கண்ணகா தேவி தேவஸ்தானம்

(17163)

# கண்ணீர் அஞ்சலி



அன்போடும் பண்போடும் எம்மோடு இணைந்து யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் நீண்டகாலமாக சேவை ஆற்றிய திருமதி த.ஜெயராணி ஓய்வு பெற்ற ஆசிரியை அவர்களின் அன்புத் துணைவர்

அமரர்

## பண்டாரி தவராசா

(ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17156)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியையுடன் இணைந்து சேவை ஆற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.